கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.107/2015

பி.வா.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **தங்கராஜ்** | தொழில் | |
| தந்தையார் பெயர் | **பொம்மிநாயக்கர்** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 07.02.2023 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

பி.வா.சா.4 தங்கராஜ் தரப்பில் முதல் விசாரணை பிரமாண நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

நான் வழக்கின் 7 ம் தரப்பினர். என் தரப்பில் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரிதான். நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு 75 வயது ஆகிறது. என் உடன் பிறந்தவர்கள் 2 சகோதரிகள். அவர்கள் முறையே பொம்முதாய், பொன்னுதாய் அவர்கள் என்னுடைய மூத்த சகோதரிகள். எனக்கு பூர்வீக சொத்துகள் எதுவும் இல்லை. என்னுடைய சகோதரிகளுக்கு நான் சிறு வயதாக இருக்கும்பொழுதே திருமணம் ஆகிவிட்டது. அவர்களின் திருமணத்தின் போது என்னுடைய பெற்றோர்கள் சீதனமாக எதுவும் செய்யவில்லை. 1 ம் பிரதிவாதி என்னுடைய மூத்த சகோதரி. சகோதரியின் மகளான 3 ம் பிரதிவாதியை நான் திருமணம் செய்துள்ளேன். எனக்கு எப்பொழுது திருமணம் நடந்தது என்று ஞாபகம் இல்லை. என்னுடைய திருமணத்தின் போது என்னுடைய மனைவியின் வயது 14 வயதுயிருக்கும். 8 ம் பிரதிவாதி சிவக்குமார் என்னுடைய மூத்த மகன். 8 ம் பிரதிவாதி எந்த வருடம் பிறந்தார் என்று ஞாபகம் இல்லை. என்னுடைய திருமணம் முடிந்து இரண்டு வருடம் கழித்து மூத்த மகன் பிறந்தார். திருமணத்திற்கு பிறகு மல்லநாயக்கன்பட்டியில் வசித்து வந்தேன்.

மல்லநாயக்கன்பட்டியில் கூட்டுக்குடும்பாமாக ஆண்டிமுத்து நாயக்கர், சின்னமாதாநாயக்கர், பெரியமாதாநாயக்கர் மற்றும் நான் ஆகியோர் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தோம். ஆண்டிமுத்து நாயக்கர் என்னுடைய மாமனார். என்னுடைய சகோதரிகள் விவசாய வேலைகள் தான் பார்த்து வந்தார்கள். அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவும் இல்லை. திருமணத்திற்கு பிறகு நானும், என் மனைவியும் விவசாய வேலைகள் செய்து வந்தோம். அந்த விவசாயநிலங்கள் ஆண்டிமுத்து நாயக்கர், சின்னமாதாநாயக்கர், பெரியமாதாநாயக்கர் ஆகியோருக்கு பாதியப்பட்டது. கூட்டுக்குடும்பத்தை என்னுடைய மாமனார் ஆண்டிமுத்துநாயக்கர் தான் மேற்பார்வை செய்து வந்தார். ஆண்டிமுத்துநாயக்கர் குடும்பத்தின் மேலாளர் என்ற அடிப்படையில் குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்தார். பூர்வீக சொத்துகளின் வருமானத்தை வைத்து ஆண்டிமுத்து நாயக்கர், 1,2,3 பிரதிவாதிகள் மற்றும் பெரியமாதாநாயக்கர் ஆகியோர்களின் பெயரில் சொத்துகள் வாங்கப்பட்டது. கூட்டுக்குடும்ப சொத்துகளை அனைவரும் பொதுவில் அனுபவம் செய்து வந்தார்கள்.

**4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**1 முதல் 3 மற்றும் 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.02.08 10:50:39 +0530

Additional District Judge,

Dindigul.